சொற்பொருளடைவு

திரட்டுதல் - தரப்பட்ட இரண்டு எண்களைக் கூட்டுதல், *addition*

மாறுதல், மாற - தரப்பட்ட இரண்டு எண்களைப் பெருக்குதல், *multiplication*

சேடம் - வகுக்கும்போது கிடைக்கும் மீதம், *reminder*

பிரித்தல் - ஒரு எண்ணிலிருந்து மற்றொரு எண்ணைக் கழித்தல், *subtraction*

வருக்கம் - ஒரு எண்ணை இரட்டித்துப் பெருக்கல் (அ) சமமான இரண்டு எண்களின் பெருக்கம், எண்ணைத் தற்பெருக்கமாக்குதல், *square*

வருக்க[த்தின்] மூலம் - தற்பெருக்கமாகும் எண்ணின் தலைகீழ் செயல்பாடு, *square root*

ஈதல் - ஒரு எண்ணை மற்றொரு எண்ணால் வகுத்தல், *division*

கனவருக்கம் - சமமான மூன்று எண்களின் பெருக்கம் (அ) மும்முடிப் பெருக்கம், *cube*

கனவருக்க[த்தின்]மூலம் - தற்பெருக்கமாகும் எண்ணின் தலைகீழ் செயல்பாடு, *cube root*

(தாக்குதல்) தாக்க - எண்களைப் பெருக்குதல்

இனம் - ஒரு எண்ணின் கூடுதல் தொகை, *partial sum* (அதாவது *5* என்றால் அதற்கு இனம் *(1+2+3+4+5 = 15* என்று கணக்கிடவேண்டும்)

அலகுநிலை - வாய்ப்பாடுகளில் அமைந்துள்ள பெருக்குத் தொகைகளின் கூட்டுத் தொகை (அ) கணித விடைத் தொகை, *result of a computation in addition, or multiplication*

சிறுகுழி - கீழ்வாய் இலக்கங்களின் பெருக்கம், *multiplication of fractions*

பெருங்குழி - முழு எண்களின் பெருக்கம், *multiplication of whole numbers*

வாய் - பெருக்கு எண், *multiplying number*

சதிரவாய்/சதுரவாய் - *80*, கணக்கதிகாரத்தின் உரைகளில் சதிரத்தை

நாற்றிக்க என்று வருமிடங்களில் 80ஆல் பெருக்கப்பட்டதைக் கொண்டு இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது, *number 80 (நாற்றித்தல்)*

நாற்றிக்க - நான்கால் பெருக்குதல், *multiply the given number by 4*

முந்திரி - அடிப்படை அளவு, *1/320*

முந்திரி இலக்கம் - முந்திரியிலிருந்து 1 வரையுள்ள எண்களுக்கான வாய்ப்பாடுகளைக் கூறுவது, *table of fractions*

நெல்லிலக்கம் - நெல் முதலிய தானியங்களை அளப்பதற்கான வாய்ப்பாடுகளைக் கூறுவது, *table of volume measures*

கீழ்வாய் இலக்கம் - ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண்களின் வாய்ப்பாடுகளைக் கூறுவது, *table of fractions*

மேல்வாய் இலக்கம் - ஒன்றுக்கு மேற்பட்ட முழு எண்களின் வாய்ப்பாடுகளைக் கூறுவது, *table of whole number*

நெடுங்கை - நிலத்தின் நீளம், *length*

குறுங்கை - நிலத்தின் அகலம், *breadth*

இட்டகை - ஒரு கணக்கில் பயன்படுத்தப்பட்ட நீள அல்லது அகலங்களின் எண்ணிக்கைக் கூட்டு

நிலக்கை - மீதம், *reminder*

கை - நிலத்தின் ஒரு பக்கம், குறிப்பிட்ட ஒரு நிலத்தின் அளவைக் கணக்கிட குறிக்கப்படும் பக்கம், *side of a land*

மாற்று, மாத்து - தங்கத்தின் தரத்தை மதிப்பிடும் அளவு, *a measure gives the quality of gold*

கொத்து, புள்ளடி, சாய்ப்பு - தங்கத்தில் காணப்படக்கூடிய குறை அல்லது அழுக்கு, *flaw found in the gold.*

பலிசை - வட்டி, *interest*

உள்மானம் - கீழ் எல்லை

புறமானம் - மேல் எல்லை